# தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்

தமிழ்நாடு அரசு நிறுவனம்

(ISO 9001 : 2008 தரச்சான்றிதழ் பெற்றது)

**எண் 132, ஈ.வெ.ரா. சாலை, கீழ்பாக்கம், சென்னை – 10**

அரசு ஆணை எண் 345 உள் (காவல் – 10 ) துறை நாள் 11.05.2012 ன் படி
உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டம் கீழ்க்கோட்டையூரில்
தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தினால் (2017 – 18)
கட்டப்படவுள்ள அடுக்குமாடி வீடுகள் வாங்குவதற்கான விண்ணப்பப் படிவம்

| | |
|---|---|
| **விண்ணப்பப் படிவம் எண்** | |

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 16.10.2017**

பெறுநர்

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்,

சென்னை – 600 010.

ஐயா,

நான் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், கீழக்கோட்டையூர், என்ற இடத்தில் வீடு வாங்க விரும்புகிறேன். அதன் பொருட்டு தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் ஒதுக்கீட்டு நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன். எனது விவரங்களை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனுதாரரின் பெயர் | : | |
| 2. | மனுதாரரின் தற்போதைய பதவி / அலுவலகம் | : | |
| 3. | மனுதாரர் பிறந்த தேதி | : | DD \| MM \| YYYY |
| 4. | திருமணமானவர் / தனி நபர் | : | |
| 5. | (அ) மனுதாரரின் தந்தையின் பெயர் | : | |
| | (ஆ) மனுதாரரின் மனைவி / கணவர் பெயர் | : | |
| 6. | மனுதாரரின் சொந்த மாவட்டம் | : | |
| 7. | தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் தொடர்பு கொள்ள வேண்டிய மனுதாரரின் அஞ்சல் முகவரி (ம) செல்லிடை / கை பேசி எண் | : | |
| 8. | பணியில் சேர்ந்த நாள் | : | |
| 9. | ஊதியத்தின் மூலம் ஆண்டு வருமானம் | : | |
| 10. | ஊதியத்தை தவிர இதர வருமானத்தின் விவரங்கள் | : | |
| 11. | மனுதாரர் வருமானவரி ரிட்டன் தாக்கல் செய்பவரா ? | : | ஆம் / இல்லை |
| | PAN எண் | : | ☐☐☐☐☐☐☐☐☐☐ |
| | ஆதார் எண் | | ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐ |
| 12. | மனுதாரருக்கு ஏற்கனவே சொந்த வீடு உள்ளதா அல்லது அவருடைய கணவர் / மனைவி பெயரில் உள்ளதா ? | : | ஆம் / இல்லை |
| | ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும் | : | |
| 13. | இதற்கு முன் மனுதாரர் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தில் வீடு வாங்கியவரா (அ) விண்ணப்பித்துள்ளாரா ? | : | |
| | ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும். | | |
| 14. | வீட்டிற்காக செலுத்த வேண்டிய தொகையினை மனுதாரர் எந்த வகையில் செலுத்த திட்டமிட்டுள்ளார் ? | : | சேமிப்பு / அரசு கடன் / வங்கி வடன் / இதர வகைகள் |
| 14a | மனுதாரர் PMAY (பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீடு திட்டத்தின்படி பயன்பெற விருப்பம் உள்ளதா? இந்த திட்டத்திற்கு ரூ. 2.67 இலட்சம் மானியத்தொகை கிடைக்கும்) | | |

## உறுதிமொழி

15.

- மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானவை. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கு வேறு ஏதாவது விவரங்கள் தேவைப்படுமாயின் அதை கொடுக்க தயாராக உள்ளேன். இக்கழகம் கோரும் விவரங்களை நான் சமர்பிக்க காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் எனது விண்ணப்பப்படிவத்தினை தள்ளுபடி செய்ய நான் சம்மதிக்கிறேன்.

- எந்த நேரத்திலும் என்னால் கொடுக்கப்பட்ட தகவல் உண்மைக்கு புறம்பாக இருப்பின் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உத்திரவை ரத்து செய்வதற்கும், ஒதுக்கீடு செய்ய பெற்ற வீட்டை திரும்ப என்னிடமிருந்து எடுத்துக் கொள்வதற்கும், வீட்டிற்கான முழுத் தொகையையும் அல்லது நான் கட்டிய தொகை முழுவதையும் இழக்க சம்மதிக்கிறேன்.

- எனது விண்ணப்பப் படிவத்தைக் கழகம் ஏற்றுக் கொண்டு எனக்கு வீடு ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் அவ்வீட்டிற்காக கழகம் நிர்ணயம் செய்யும் விலையினை செலுத்த சம்மதிக்கிறேன்.

- ஒதுக்கீடு மற்றும் இதர விவரங்களில் ஏதாவது பிரச்சினையோ அல்லது சந்தேகமோ ஏற்படின், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் உத்திரவிற்கு கட்டுப்படுவேன் என உறுதி அளிக்கிறேன்.

- இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இத்திட்டம் சம்மந்தமான சிறப்பு அம்சங்களை நான் அறிவேன்.

16. முன் பணத் தொகைக்காக ................................................................ வங்கியில் பெறப்பட்ட ரூ. ..................... (ரூபாய் ...................................................................................................... மட்டும்) க்கான வங்கி வரைவோலை எண் ................................ நாள் ........................ விண்ணப்பத்துடன் இணைத்துள்ளேன்.

17. எனக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டப் பின்னர், நான் ஒதுக்கீட்டை ஏற்றுக் கொள்ளத் தவறினால் நான் செலுத்திய முன்பணம் திரும்ப கிடைக்காது என அறிவேன்.

இடம் :

நாள் :

**விண்ணப்பத்தாரரின் கையொப்பம்**

## பிரிவு அதிகாரியின் மேல் வரைவு

மனுதாரரால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என சான்று அளிக்கிறேன்.

இடம் :

நாள் :

**பிரிவு அதிகாரியின் கையொப்பம்**

பெயர் :

பதவி மற்றும் பணியிடம்

(முத்திரை)

## இணைப்பு

**தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் காஞ்சிபுரம் மாவட்டம், கீழக்கோட்டையூரில் கட்டப்பட உள்ள உங்கள் சொந்த இல்ல திட்டங்களின் சிறப்பம்சங்கள்**

விண்ணப்ப படிவங்கள் இலவசமாக பதிவிறக்கம் செய்ய இணையதளம் www.tnphc.com அல்லது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆணையாளர் அலுவலகங்களை அணுகவும்.

**1. தகுதி :**

தமிழ்நாடு காவல் துறையில் காவலர் முதல் காவல் துணைக் கண்காணிப்பாளர் வரை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறையில் தீயணைப்பு வீரர் முதல் கோட்ட தீயணைப்பு அலுவலர் வரை மற்றும் சிறைத் துறையில் சிறைக்காவலர் முதல் சிறை அலுவலர் வரை அரசு ஆணையின்படி எண் 345 உள் (காவல் – 10) துறை நாள் 11.05.2012

**மாடிக்குடியிருப்பு வகைகள் / கட்டடப் பரப்பளவு**

காவலர் / தலைமைக் காவலர் தியணைப்பவர் / உதவி தீயணைப்பு நிலைய அலுவலர் / சிறைக்காவலர் / தலைமை சிறைக்காவலர் வீடுகளின் கட்டிடப்பரப்பளவு – 650 சதுர அடி (2 படுக்கை அறை வசதி)



**தோராய விலை ரூ.20 இலட்சம்**

உதவி ஆய்வாளர் / ஆய்வாளர் நிலைய அலுவலர் / உதவி கோட்ட அலுவலர் / உதவி சிறை அலுவலர் வீடுகளின் கட்டிடப்பரப்பளவு – 850 சதுர அடி (2 படுக்கை அறை வசதி)



**தோராய விலை ரூ.26 இலட்சம்**

காவல் துணைக்கண்காணிப்பாளர் / கோட்ட அலுவலர் / சிறை அலுவலர் வீடுகளின் கட்டிடப் பரப்பளவு – 1100 சதுர அடி (3 படுக்கை அறை மற்றும் பால்கனி வசதி)



**தோராய விலை ரூ.34 இலட்சம்**

**II. திட்ட இடம்**

அரசு ஆணையின் படி காஞ்சிபுரம் மாவட்டம் கீழக்கோட்டையூரில் 52.40 ஏக்கர் நிலப்பரப்பளவில் கட்டப்பட உள்ளது. இந்த திட்டம் தாம்பரம் இரயில் நிலையத்தில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலும் வண்டலூர் மற்றும் கேளம்பாக்கம் சாலைக்கு மிக அருகாமையிலும் அமைந்துள்ளது.



III. நிபந்தனைகள் :

1. தமிழ்நாடு மாநிலம் முழுவதும் ஒரே தொகுப்பாக கருதப்படும். எனவே வீடு பெற விண்ணப்பிக்க எல்லா மாவட்டத்தை சேர்ந்தவரும் தகுதியானவர்கள்.

2. விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நேரத்தில் மதிப்பீட்டில் ஒரு சதவிகித தொகையை முன்வைப்பு தொகையாகவும் மற்றும் பதிவுக் கட்டணமாக ரூ. 100ம் வசூலிக்கப்படும். விண்ணப்பதாரர் விலகிக் கொள்ளும் பட்சத்திலோ அல்லது ஒதுக்கீடு கிடைக்கப் பெறாத பட்சத்திலோ இந்த முன்வைப்புத் தொகை வட்டி இல்லாமல் திருப்பி அளிக்கப்படும். பதிவுக்கட்டணம் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

3. விண்ணப்பங்கள் அதிகளவு பெறப்பட்டால் ஒதுக்கீடு குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும்.

4. மீதித் தொகையை தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் நெறிமுறைகளின் படி செலுத்துதல் வேண்டும்.

5. ஒதுக்கீடு பெற்ற நபர்கள் அரசு வங்கி மூலம் கடன் பெற்று தவணைத் தொகையை செலுத்தலாம். பிரதம மந்திரியின் PMAY திட்டத்தின்கீழ் கடன் பெறுபவர்களுக்கு அரசு மானியம் ரூ. 2.67 இலட்சம் வங்கிகள் வழங்கும். மேலும் வங்கிகள் மூலம் கடன் பெறுபவர்கள் தேவைக்கேற்ப 15 ஆண்டுகள்/ 20 ஆண்டுகள்/ 25 ஆண்டுகள்/ 30 ஆண்டுகள் கடன் பெறலாம். மேலும் 70 வயது வரை குறைந்த தவணைத் தொகை செலுத்தலாம். இந்த திட்டத்திற்கு தேவையான உதவிகளை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் செய்யும்.

IV. சிறப்பம்சங்கள்

1. குறைந்த விலையில் நிறைவான வசதிகள் / கூடுதல் செலவுகள் இன்றி

2. போதுமான குடிநீர் இணைப்பு மற்றும் அனைத்து இடங்களுக்கு செல்ல சாலை வசதிகள்.

3. மெருகூட்டப்பட்ட செயற்கை களிமண் ஓடுகள் (Vitrified Tiles) நவீன சமையலறை மற்றும் குளியல் அறைகள், மற்றும் வாகன நிறுத்தும் இடம்.

<u>மேலும் தகவல்களுக்கு</u>

**திரு. எஸ். சரவணன், பி.ஈ**

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகம், சென்னை – 10, அவர்களை அணுகவும்
தொ.பே : 044 - 28364761 / கைபேசி : 94444 00782

**திரு. எஸ் நடராஜன்,**

உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகம், சென்னை – 10, அவர்களை அணுகவும்
தொ.பே : 044 - 28364761 / கைபேசி : 94432 68895